**சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டம் - 2018**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

சவூதியினால் நிதியளிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அபிவிருத்தி செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் அபிவிருத்திக்கான சவூதி நிதியத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 ஒக்தோபர் 30 ஆந் திகதிய 9/574 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னைய துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, கிழக்கு, சப்ரகமுவ, மேற்கு மற்றும் வட மத்திய மாகாணங்களிலுள்ள 06 வீதிகளின் 131.50 கிலோமீற்றர் பிரிவுகளினை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 10,628 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 81.75 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 7,800 மில்லியனுக்குச் சமனான யூஎஸ்டொ. 60 மில்லியனை நிதியளிப்புச் செய்வதற்கு அபிவிருத்திக்கான சவூதி நிதியம் இணங்கியிருந்தது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளை 2013 யூன் 03 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2020 ஒகஸ்ட் 05 இல் பூர்த்திசெய்வதற்கு பட்டியல்படுத்தப்பட்டது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

-----------------------------------------------------

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-----------------------------------------------------

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட

நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| நானாவித வெளிநாட்டு உதவியளித்தல் செயற்திட்டத்தின் கீழ் ஒன்பது செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதுடன் அவ் அனைத்து செயற்திட்டங்களிற்குமான செயற்திட்ட கண்காணிப்பு கிரயம் ரூபா 69.9 மில்லியன் தொகை 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. செயற்திட்டமானது ஒவ்வொரு செயற்திட்டங்களிற்குமிடையேயும் செலவினங்களை பங்கீடு செய்ய முறையான அடிப்படை ஒன்றினை பயன்படுத்தியிருக்காமை அவதானிக்கப்பட்டது. எனவே இச் செயற்திட்டத்திற்கான உரிய கிரயங்கள் வெளிப்படுத்த முடியாமல் போகக்கூடும். | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் மிகைமதிப்பீடு. | கவனத்தில் கொள்ளப்பட்டதுடன் 2020 ஆம் ஆண்டிலிருந்து பீஎம்யூ செலவினங்களை ஒவ்வொரு செயற்திட்டங்களிற்குமிடையே பங்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டத்திற்கான ஏற்பட்ட உண்மை கிரயம் மற்றும் ஏற்பட்ட பொறுப்புக்கள் என்பன கணக்கிடப்படல் வேண்டும். |

## 3 பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்றிட்ட செயற்பாடுகளின் பௌதீக செயலாற்றல்

| உருப்படி | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| வீதிகளின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல். | செயற்திட்டத்தின் பூர்த்தியாக்களானது அதன் அனைத்து ஆறு வீதிகளும் ஒன்றாக ஆரம்பிக்காததன் காரணமாக தாமதித்திருந்தது. எனவே, செயற்திட்ட முகாமைத்துவ கிரயமாக ஏற்பட்டிருந்த ரூபா 70 மில்லியனில், முதல் பகுதி பூர்த்தியானதன் பின்னர் 2016 சனவரி தொடக்கம் 2018 வரையான காலப்பகுதிக்காக ரூபா 15.5 மில்லியன் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | மந்தகதியான திட்டமிடல் காரணமாக செயற்திட்ட கிரயம் அதிகரிப்பதற்கான சாத்தியம். | 6 ஒப்பந்த பொதிகளும் பூர்த்தியானதன் பின்னர், ஒரு கடன் மீதி காணப்பட்டதுடன் நாவுல தம்புள்ள பகுதியில் உண்மையாக உள்ளடக்கப்பட்டுள்ள கண்டி – யாழ்ப்பாணம் வீதியில் 53+740 கி.மீ இலிருந்து 58+000 கி.மீ வரையான நாவுல நகர பிரிவினை மேம்படுத்த தீர்மானிக்கப்பட்டது. எனவே பீஎம்யூவினால் அனைத்து செயற்திட்டங்களையும் ஒன்றாக ஆரம்பிக்க முடியாமலிருந்தது. | வீதி வேலைகளின் மிகுதி புனரமைப்பினை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | வீதி புனரமைப்பிற்கான புதிய செயற்திட்டங்களை அமுல்படுத்த முன்னர் ஒரு செயற்பாட்டு திட்டம் தயார்க்கப்படல் வேண்டும். இருப்பினும், கண்டி-யாழ்ப்பாணம் வீதிப்பிரிவின் 53+740 தொடக்கம் 54+990 வரைக்குமான புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தலிற்காக அவ்வாறான ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், ஒப்பந்த காலம் 2020 ஓகஸ்ட் 03 இல் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்பட்டுள்ளது. ஆனால் கடன் உடன்படிக்கைகளின் உரிய காலப்பகுதிகள் 2020 | கடன் உடன்படிக்கையானது நீடிக்கப்படாவிட்டால் வீதிகளின் அனைத்து புனரமைப்பு வேலைகளும் பூர்த்தியாகாமல் போவதற்கான சாத்தியம். | சொல்லப்பட்ட வீதி பிரிவு (நாவுலநகர), பெறுகை திட்டத்தினை தயாரிக்கும் போது நாவுல – தம்புள்ள வீதி பிரிவின் மேம்படுத்தலின் கீழான உண்மை வேலை நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. கடன் செல்லுபடியாகும் காலத்தினை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடன் செல்லுபடியாகும் காலத்தினை நீடிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சனவரி 30 வரை மாத்திரமே நீடிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | | |
| (ஆ) | செயற்திட்டத்திற்காக 982 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 53 மில்லியன் இழப்பீட்டு தொகையினை செலுத்தி 98 காணித்துண்டுகள் மாத்திரமே கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளின் தீர்ப்பனவுகளில் தாமதம் காரணமாக, இழப்பீடுகள் மீதான வட்டி கிரயங்கள் அதிகரிப்பதற்கான சாத்தியம். | உடன்பட்டனர். | இழப்பீடுகளை கொடுத்து தீர்த்து அதன் மீதான மேலதிக கிரயங்களை தவிர்க்க துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | அலவத்துகொட தொடக்கம் பலபத்வெல வரையான கண்டி – யாழ்ப்பாணம் வீதிப்பிரிவின் ரூபா 312.9 மில்லியன் பெறுமதியான மாறல் கட்டளைக்கான கொடுப்பனவில் 272 நாட்கள் தாமதம் காரணமாக மொத்தமாக ரூபா 38.7 மில்லியன் ஒரு வட்டியாக ஒப்பந்ததாரரினால் பெறப்பட்டிருந்தது. மேலும், ஒப்பந்ததாரர் அலவத்துகொட தொடக்கம் பலவத்தவெல வரையான கண்டி யாழ்ப்பாணம் வீதிப்பிரிவு மற்றும் பலவத்வெல தொடக்கம் நாவுல வரையான ஏனைய பிரிவுடனும் தொடர்புபட்டு முறையே 7.6 மில்லியன் மற்றும் 8 மில்லியன் தாமத கொடுப்பனவு வட்டி பெறுவனவு ஐபீசி இனை சமர்ப்பித்திருந்தது. | மொத்த செயற்திட்ட கிரயமும் அதிகரிப்பதற்கான சாத்தியம். | ஒப்பந்த பொது நிபந்தனைகளின் பிரகாரம், தாமத கொடுப்பனவுகளிற்கு ஒப்பந்ததாரர் உரித்துடையவராவார். வட்டி கொடுப்பனவுகள் உயர்மட்ட முகாமையின் தீர்மானம் மற்றும் ஒப்பந்ததாரரின் அதே பிணக்கு காரணமாக செலுத்தப்பட்டிருக்கவில்லை. | தேவையற்ற கிரயங்களை குறைக்க துரித நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் வேலைகளிற்காக ரூபா 8,031 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் ஆறு ஒப்பந்த பொதிகள் செய்யப்பட்டிருந்தன. இருப்பினும், மொத்த ஒப்பந்த வழங்கள் விலைகள் ரூபா 6,955 மில்லியன் அல்லது மொத்த மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 13 சதவீதமாக மாத்திரமே இருந்தது. எனவே, நம்பத்தகாத மற்றும் மிகை மதிப்பீடுகள் அவதானிக்கப்பட்டன. மேலும், செயற்திட்டமானது | நம்பத்தாகாத மதிப்பீடுகள் காரணமாக நிதிகள் முறைகேடாவதற்கான வாத்தியம். | மாறல் கட்டளைகள் மற்றும் ஈஒடி பெறுவனவுகளின் மொத்த கிரயமான ரூபா 1,194.41 மில்லியன் மதிப்பீடுகளில் அனுமதிக்கப்பட்ட நிகழத்தக்கவைகளில் 25% இற்கு குறைவாக இருந்தது. நிர்மான வேலைகளை செய்யும் போதான பலதரப்பட்ட வேலைகள் நிலத்தின் தன்மையின் எதிர்பாராத நிலைமை மற்றும் காணி கொள்வனவினை செய்யும் | யதார்த்தமான மதிப்பீடுகளட எதிர்காலத்தில் செய்யப்படுமா என்பதை மதிப்பீடு செய்ய வேண்டும். |

அவ்வீதிகளின் புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல் வேலைகளின் மந்தகதியான திட்டம் காரணமாக, மாறல்கள் மற்றும் பெறுவனவுகளின் கால நீடிப்பு என்பனவற்றிற்காக கூட்டு மொத்தமாக ரூபா 1,194 மில்லியன் செலுத்தியிருந்தது.

போதான ஏனைய நிறுவன தாமதம் போன்ற காரணங்களினால் தவிர்க்க முடியாது.